# கிருபையை போக்கடித்தவர்கள் - பாகம் 1



வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டு காலத்திலும், புது ஏற்பட்டு காலத்திலும், தேவன் சில நபர்கள் மீது அதிகமான கிருபையைப் பொழிந்து, அவர்கள் தேவனுடைய வழியில், திட்டத்தில், நடக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்த்திருந்தும், தங்களுக்கு கொடுக்கப்பட்ட **மிகுதியான கிருபையை போக்கடித்தவர்கள்** பலர், அதனால் அவர்களுக்கு தேவத்திட்டத்தில் பங்கு இல்லாமற்போய் அவர்கள் பேரும் மறக்கடிக்கப்பட்டு போயிற்று. இப்படிப்பட்டவர்களின் வாழ்க்கை நமக்கு எச்சரிப்பின் செய்தியாக உள்ளது. அப்படிப்பட்டவர்களில் மிகவும் முக்கியமான சிலரை பற்றி நாம் இங்கு தியானிப்போம்.

## லோத்து:

இவர்களில் முதலாவது நாம் காண இருப்பது லோத்து ஆகும். புதிய ஏற்பாட்டு நீதிமான்களின் பட்டியலில் **(2 பேதுரு 2:8)**, அவர் காணப்பட்டாலும், ஆதியாகமத்தில் அவருடைய வாழ்க்கை அனைவருக்கும் ஒரு எச்சரிப்பாகவே காணப்படுகிறது. ஆம் விசுவாச தகப்பனாகிய ஆபிரகாமோடு தன் வாழ்க்கை பயணத்தை அவர் துவக்கினாலும், ஆபிரகாமிற்கு உண்டான

ஆசீர்வாதத்தினால் தானும் ஆசீர்வாதமுடையவராய் அவர் காணப்பட்ட பொழுதிலும், எப்பொழுது அவர் ஆபிரகாமின் விசுவாச பயணத்தை விட்டு விலகி, கண் காண ஆசீர்வாதமாய் இருப்பதைக் கண்டு, ஆபிரகாமை விட்டு விலகிச் சென்றாரோ, அன்றிலிருந்து அவருடைய பாதை தேவ நோக்கத்தை விட்டு விலகிச் சென்றது. **ஆதி 13:14** தெளிவாக கூறுகிறது **"லோத்து ஆபிராமைவிட்டுப் பிரிந்தபின்பு,"** என்று. ஆபிரகாமினால் உண்டான உலக ஆசீர்வாதத்தை அவரோடு பங்கிட்டு, சமாதானமாய் ஆபிரகாமோடு இருந்திருந்தால், ஒருவேளை லோத்துவின் வாழ்க்கை வேறு மாதிரி இருந்திருக்கலாம். ஆனால் அவரோ எளிதான குறுக்கு வழியை தேர்ந்தெடுத்தார்.

லோத்து ஆபிரகாமை விட்டு பிரிந்த சில காலத்திற்குள்ளாகவே, அடுத்த அதிகாரத்திலேயே சோதோம், கொமோரா மீது படை எடுத்து வந்த ராஜாக்கள், **"ஆபிராமின் சகோதரனுடைய குமாரனாகிய லோத்து சோதோமிலே குடியிருந்தபடியால், அவனையும், அவன் பொருள்களையும் கொண்டுபோய்விட்டார்கள்." (ஆதி 14:12)**. இதை கேட்டவுடன் ஆண்டவர் இதுவரை பரதேசியாய் நடந்து திரிந்த ஆபிரகாமை, தன் சகோதரன் குமாரனாகிய லோத்தை மீட்க, ஆபிரகாமை ஒரு அரசனைப் போல் படையெடுத்துச் சென்று லோத்தை மீட்க செய்கிறார் **(ஆதி 14:14-16)**. இங்கு மறுபடியும் ஆண்டவர் லோத்துவிற்கு, ஆபிரகாமோடு தேவத்திட்டத்தில் நடப்பது தான் பாதுகாப்பு, அந்த பாதுகாப்பு இல்லையென்றால் அனைத்து பொருள்களும் ஒரு நொடிப் பொழுதில் ஒன்றுமில்லாமல் போகும் என்பதை தெளிவுப்படுத்தினார். ஆனால் ஏனோ லோத்து மறுபடியும் சோதோம், கொமோராவையே தெரிந்து கொண்டார். ஆபிரகாமோடு பரதேசியாய் அலைந்தாலும், அது தேவ நடத்துதலின்படியானது என்பதை லோத்து உணராமல், சோதோம், கொமோராவின் மக்கள் பொல்லாதவர்களாக இருந்தும் அவர்களோடு இருப்பதையே தெரிந்து கொண்டார். இங்கு ஆண்டவர் இரண்டாவது தடவை ஆபிரகாமோடு தேவத்திட்டத்தில் நடக்க கிருபை அளித்த போதிலும் அவர் அதை போக்கடித்தார்.

இதற்கு பின்பு பல ஆண்டுகள் கழித்து, ஆண்டவர் சோதோம், கொமோராவை அழிப்பதற்கு முன், சோதோம், கொமோராவை அழிக்கப் போகும் தூதர்களோடு தானும் ஆபிரகாமின் கூடாரத்திற்கு வந்து **(ஆதி 18:1-3)**, அதை

ஆபிரகாமுக்கு தெரியப்படுத்தினார் (ஆதி 18:20,21). அப்பொழுது ஆபிரகாம் லோத்துவிற்காய் மன்றாடுகிறார் (ஆதி 18:22-33). ஆபிரகாமின் வேண்டுதலை கேட்டு தேவன், லோத்துவின் வீட்டிற்கு சோதோம், கொமோராவை அழிக்க போகும் தூதர்களை அனுப்பி, அவனையும் அவன் குடும்பத்தினரையும் அழிவிற்கு விலக்கித் தப்புவிக்க, அவர்களை அவரே அங்கிருந்து வெளியே கொண்டு வருகிறார். ஒருவேளை தாமாய் லோத்து, **2 பேதுரு 2:6-8 வசனங்களில் "சோதோம் கொமோரா என்னும் பட்டணங்களையும் சாம்பலாக்கிக் கவிழ்த்துப்போட்டு, ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, பிற்காலத்திலே அவபக்தியாய் நடப்பவர்களுக்கு அவைகளைத் திருஷ்டாந்தமாக வைத்து; அக்கிரமக்காரருக்குள் வாசமாயிருக்கையில் அவர்களுடைய காமவிகார நடக்கையால் வருத்தப்பட்டு; நாள்தோறும் அவர்களுடைய அக்கிரமக்கிரியைகளைக் கண்டு கேட்டு நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய லோத்தை அவர் இரட்சித்திருக்க;"** காண்கிறபடி, இருதயத்தில் வாதிக்கப்பட்ட அவர், அவ்விடத்தை விட்டு ஆபிரகாமிடத்திற்கு வந்திருப்பாரானால், அவர் குடும்பம் முழுமையாக அழிவிற்கு தப்பியிருக்கும். ஆனால் அவரோ, அதன் பாவத்தை காட்டிலும், அங்கு சௌகரியமாய் இருப்பதையே தெரிந்து கொண்டார். இதன் விளைவுகளை அவர் அனுபவித்தார்.

**ஆதியாகமம் 19ஆம் அதிகாரத்தில்**, லோத்தின் வீட்டை சுற்றி வளைத்த சோதோமின் பொல்லாத மனிதர்கள் **"அதற்கு அவர்கள்: அப்பாலே போ; பரதேசியாய் வந்த இவனா நியாயம் பேசுகிறது? இப்பொழுது அவர்களுக்குச் செய்வதைப்பார்க்கிலும் உனக்கு அதிக பொல்லாப்புச் செய்வோம் என்று சொல்லி, லோத்து என்பவனை மிகவும் நெருக்கிக் கதவை உடைக்கக் கிட்டினார்கள். " (ஆதி 19:9)**. இங்கு பரதேசியாய் வந்த இவனா என்று லோத்துவை தரக்குறைவாக கூறுவதை காணலாம். ஆனால் உண்மையில் லோத்து ஆபிரகாமுடன் தன் செல்வத்தை பங்கிட முடியாதவராய், தன் ஆஸ்தி, ஐஸ்வரியத்தை காப்பாற்றி பெருக்கவே அவர் சோதோமை தெரிந்து கொண்டார். ஆனால் அவருக்கு இறுதியில் கிடைத்தது பரதேசி என்ற பட்டப் பெயர் மட்டுமே.

ஆனால் ஆண்டவரோ லோத்துவின் மேல் வைத்த கிருபையை இன்னும் வெளிப்படுத்துபவராய், **"கிழக்கு வெளுக்கும்போது அந்தத் தூதர் லோத்தை நோக்கி: பட்டணத்திற்கு வரும் தண்டனையில் நீ**

**அழியாதபடிக்கு எழுந்து, உன் மனைவியையும், இங்கே இருக்கிற உன் இரண்டு குமாரத்திகளையும் அழைத்துக்கொண்டுபோ என்று சொல்லி, அவனைத் துரிதப்படுத்தினார்கள். அவன் தாமதித்துக்கொண்டிருக்கும்போது, கர்த்தர் அவன்மேல் வைத்த இரக்கத்தினாலே, அந்தப் புருஷர் அவன் கையையும், அவன் மனைவியின் கையையும், அவன் இரண்டு குமாரத்திகளின் கையையும் பிடித்து, அவனைப் பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய் விட்டார்கள். அவர்களை வெளியே கொண்டுபோய் விட்டபின்பு, அவர்: உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப் பாராதே; இந்தச் சமபூமியில் எங்கும் நில்லாதே; நீ அழியாதபடிக்கு மலைக்கு ஓடிப்போ என்றார்.“ (ஆதி 19:15-17)**. எல்லாம் உடையவராய் சோதோமிற்குள் சென்ற லோத்து, ஏதும் அற்றவராய் சோதோமின் அழிவோடு, அனைத்தையும் இழந்தவராய் (தன் இரு மகள்கள் தவிர), தன் மனைவியையும் இறுதி நேரத்தில் பறிகொடுத்தவராய், இறுதியில் ஒரு மலைக்குகைக்குள் தஞ்சம் அடைந்தார்.

**ஆதி 19:29 கூறுகிறது, “தேவன் அந்தச் சமபூமியின் பட்டணங்களை அழிக்கும்போது, தேவன் ஆபிரகாமை நினைத்து, லோத்து குடியிருந்த பட்டணங்களைத் தாம் கவிழ்த்துப்போடுகையில், லோத்தை அந்த அழிவின் நடுவிலிருந்து தப்பிப்போகும்படி அனுப்பிவிட்டார்.“**. ஆம் எந்த ஆபிரகாமோடு தன் செல்வ செழிப்பை பகிர்ந்து கொள்ள முடியாமல் அவரை விட்டுப் பிரிந்தாரோ, அதே ஆபிரகாமை தேவன் நினைத்துதான், லோத்தை தப்புவிக்க பண்ணினார். இப்பொழுதாவது தன்னுடைய நிலையை உணர்ந்து அவர் தன் பிள்ளைகளோடு ஆபிரகாமிடம் தஞ்சம் அடைந்திருப்பாரானால், அவர் வாழ்க்கை முற்றிலும் மாறி இருக்கும். ஆனால் சோதோமின் அழிவு வரை, அதை விட்டு வெளியேற மனதில்லாமல் இருந்த லோத்து, ஆபிரகாமிடமும் செல்லாமல் போனதால், ஆதியாகமம் 19ஆம் அதிகாரத்தின் இறுதியில், அவருடைய சந்ததி பாவ சந்ததியினராய், தேவ மக்களாகிய இஸ்ரவேலருக்கு எதிரானவர்களாய், தேவனுக்கேற்காதவர்களாய் மாறிப் போயினர். ஆபிரகாமோடு தன் வாழ்வை துவக்கி, ஆடு மாடு, ஆஸ்தி உடையவராய் ஆனதும், ஆபிரகாமை விட்டு சோதோமை நோக்கி சென்று, இறுதியில் ஒன்று மற்றவராய் குகை வாசியாய் மாறி, தேவனுக்கேற்காத சந்ததியாய் அவர் வாழ்க்கை முடிந்தது. அவர் வாழ்வில் ஒவ்வொரு சறுக்கல்கள் போதும், தேவ கிருபை அவரை தாங்கி பிடித்த பொழுதிலும்,

தனக்கு கொடுக்கப்பட்ட அனைத்து கிருபையையும் போக்கடித்தவராய், அவர் வாழ்க்கை முடிந்தது. இது இன்று, அநேகருக்கு ஒரு நல்ல பாடமாய் அமைந்துள்ளது. தேவ ஐக்கியத்தோடு, தேவ பிள்ளைகளோடு, வாழ்வின் எந்த ஒரு சூழ்நிலையிலும் நிலைத்திருப்போமானால், தேவ கிருபையும், ஐக்கியமும், பாதுகாப்பும் நமக்கு கிடைக்கும். ஆனால் அதை விட்டுவிட்டு, உலக ஆடம்பரங்களையும், அதன் பெருமைகளையும் கண்டு, அங்கு செல்வோமானால் இறுதியில் லோத்துவை போல் நமக்கு எதுவும் மிஞ்சாது. லோத்துவை போல இன்னும் பலரது வாழ்க்கை நமக்கு படிப்பினையாய் வேதத்தில் பதியப்பட்டுள்ளது, அதை நாம் வரும் பதிவுகளில் காணலாம். தேவன் தாமே நாம் அவருடைய பலத்த கரத்திற்குள் எப்பொழுதும், எந்நாளும் அடங்கியிருக்க கிருபை செய்வாராக, ஆமென், அல்லேலூயா.